ASSIST

"மௌனம் உடைக்கும் மழலைக் குரல்!"

SALESIAN SISTERS OF DON BOSCO INT FMA



# கீச்சுகள்

இதழ் 01 | ஜனவரி 2026

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1 | பதிப்பாசிரியர் குழு |
| 2 | வாழ்த்துச் செய்தி: மாநில தலைவி |
| 3 | இயக்குநர் மடல் |
| 4 | ஒருங்கிணைப்பாளர் உரை: சிறுவர் மேம்பாட்டுத் துறை |
| 5 | சின்னக் கைப்பிடி |
| 6 | எதிர்கால நம்பிக்கை |
| 7 | குழந்தைகளின் உரிமை |
| 8 | என் பூமி... என் எதிர்காலம்! |
| 9 | நம் பூமியின் எதிர்காலம் |
| 10 | சுற்றுச்சூழல் |
| 11 | டீ - தோட்டம் |
| 12 | விழுந்தாலும் எழும் விதையாய் இரு! |
| 13 | அடர்ந்த காடுகள் |
| 14 | கடைசி விதை |
| 15 | எதிர்கால நம்பிக்கை |
| 16 | பூமி |

# பதிப்பாசிரியர் குழு



**அஜய் வில்லியம்ஸ்**
திட்ட வியூகவியலாளர்,
அசிஸ்ட்- சமூக மேம்பாட்டு அலுவலகம்
ஆசிரியர், கீச்சுக்கல்.



**அ. மோனிஷா**
மாவட்ட துணை
ஒருங்கிணைப்பாளர்
திண்டுக்கல்



**லாரன்ஸ்**
மாவட்ட துணை
ஒருங்கிணைப்பாளர்
புளியடித்தமம்



**சேதுபதி**
மாவட்ட துணை
ஒருங்கிணைப்பாளர்
திருச்சி



**வசந்த்**
மாவட்ட துணை
ஒருங்கிணைப்பாளர்
தூத்துக்குடி



# மாற்றத்தை விதைக்கும் குழந்தைகளின் குரல்

கீச்சுகள்

வண்ணங்கள் நிறைந்த இந்த 'கீச்சுகள்' இதழின் பக்கங்களில், உங்களின் விலைமதிப்பற்ற பூமியைப் பேணிப் பாதுகாப்பதோடு, ஒவ்வொரு குழந்தையின் பிரிக்க முடியாத உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கின்றன. பசுமையான காடுகள், தூய்மையான ஆறுகள் மற்றும் ஒரு நீதியான உலகத்திற்கான உங்களின் அச்சமற்ற கனவுகளை நீங்கள் கதைகளாக, கவிதைகளாக நெய்யும் விதம், திருச்சிராப்பள்ளி மாநில தலைவி என்ற முறையில் எனக்கு மிகுந்த ஊக்கத்தை அளிக்கிறது. உங்களின் இந்தத் துணிச்சலான குரல்கள் எல்லைகளைக் கடந்து உலகளாவிய மாற்றத்தை விதைக்கின்றன.


கல்வி, பாதுகாப்பு மற்றும் செழிப்பான பூமிக்கான குழந்தைகளின் உரிமைகள் என்பவை வெறும் தூரத்து வாக்குறுதிகள் அல்ல; அவை நாம் அனைவரும் இணைந்து பாதுகாக்க வேண்டிய உயிருள்ள உண்மைகள் என்பதை உங்களின் எழுத்துக்கள் நினைவூட்டுகின்றன. உங்களது இந்த விழிப்புணர்வுப் பணிகள் வழியாக, மரங்களை நடுவதற்கும், வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்கும், அநீதிக்கு எதிராக நிமிர்ந்து நிற்பதற்கும் எங்களை நீங்கள் தூண்டுகிறீர்கள்.

மாசுபட்ட வானத்திற்காக வருந்தும் கவிதைகள் முதல், தூய்மையான கிராமங்களை உருவாக்க ஒன்றிணைந்து செயல்படும் குழந்தைகளின் கதைகள் வரை, உங்களது படைப்பாற்றல் இந்த இதழ் முழுவதும் துடித்துக் கொண்டிருக்கிறது. இந்த 'கீச்சுகள்' இதழ் உங்களின் எண்ணங்களைப் உரக்கச் சொல்லும் ஒரு ஒலிப்பெருக்கியாக அமையட்டும்; அது நமது நிலங்களைக் கடந்து வெகுதூரம் எதிரொலிக்கட்டும்.

தொடர்ந்து எழுதுங்கள், கனவு காணுங்கள், உரிமைகளுக்காகக் குரல் கொடுங்கள் – நமது பூமியும் வருங்காலமும் உங்களின் துணிச்சலான குரல்களையே நம்பியிருக்கின்றன.

பெருமிதத்தோடும் ஆசிகளோடும்,

**அருட்சகோதரி. பெர்னாண்டோ மஜெல்லா**
திருச்சிராப்பள்ளி மாநில தலைவி





# அன்பார்ந்த குழந்தைகளே, மதிப்பிற்குரிய வாசகர்களே மற்றும் நலன்விரும்பிகளே,

மிகுந்த மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் எமது “கீச்சுக்கள்” இதழின் முதல் பதிப்பை உங்கள் கைகளில் ஒப்படைப்பதில் மட்டற்ற பெருமிதம் கொள்கிறேன். இது அக்கம் பக்கத்துப் பாராளுமன்றத்தின் பயணத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல். குழந்தைகள் வெறும் பார்வையாளர்களாக மட்டுமல்லாமல், தங்கள் எதிர்காலத்தைத் தாங்களே வடிவமைக்கும் ஆற்றல்மிக்க தலைவர்களாக உருவெடுப்பதன் சாட்சியே இந்த இதழ்.

“கீச்சுக்கள்” என்பது நமது அக்கம் பக்கத்தின் விழித்தெழுந்த மனச்சாட்சி. உங்கள் கதைகள், கவிதைகள், ஓவியங்கள் மற்றும் கனவுகளின் வழியாக குழந்தைகளின் அபாரமான படைப்பாற்றலும், மறைந்திருக்கும் ஞானமும் வெளிப்படுகின்றன. குழந்தைகள் நாளைய தலைவர்கள் மட்டுமல்ல, அவர்கள் இன்றைய சமூகத்தின் பொறுப்புள்ள குடிமக்கள் என்பதையும் நீங்கள் உலகிற்கு உரக்கச் சொல்கிறீர்கள்.

நீதிக்காகக் குரல் கொடுத்து, சமத்துவத்திற்காக ஒன்றிணைந்து செயல்படும் அக்கம் பக்கத்துப் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு உறுப்பினரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்த இதழ், உங்கள் கருத்துகளைச் சுதந்திரமாகப் பகிரவும், அநீதிகளை கேள்வி கேட்கவும், அமைதி நிறைந்த புதியதோர் உலகைப் படைக்கவும் உங்களுக்கு ஒரு சிறந்த களமாக அமையும்.

குழந்தைகளின் தன்னம்பிக்கையை வளர்த்து, தலைமைத்துவப் பண்பை ஊக்குவிக்கும் ஒரு சக்தியாக “கீச்சுக்கள்” என்றும் திகழும். குழந்தைகளுடன் அன்போடு பயணிக்கும் ஒருங்கிணைப்பாளர்கள், வழிகாட்டிகள், பெற்றோர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் உரித்தாக்குகிறேன்.

அன்புக் குழந்தைகளே! உங்கள் குரல்கள் இந்த உலகிற்கு மிக அவசியம். பொறுப்புணர்வோடும், கருணையோடும் உங்கள் நீதிக்கான குரல்களைத் தொடர்ந்து உயர்த்துங்கள்.

அன்பு மற்றும் ஆசிகளுடன்,

**அருட்சகோதரி. ஆரோக்கிய மேரி செல்வி**
இயக்குநர்,
அசிஸ்ட்- சமூக மேம்பாட்டு அலுவலகம்
திருச்சிராப்பள்ளி



# புதிய மொட்டுகளின் புரட்சி மொழி!

"ஒவ்வொரு குழந்தையின் கற்பனைத்திறனும் ஒரு விதை போன்றது. அந்த விதைகளுக்கு நீர் ஊற்றி, அவை அறிவும் ஆற்றலும் கொண்ட விருட்சங்களாக வளர்வதைக் காண்பதே ஒரு சமூகத்தின் உண்மையான வளர்ச்சி. கிராமப்புறக் குழந்தைகளின் கனவுகளையும், உரிமைகளுக்கான அவர்களின் தேடலையும் சுமந்து வரும் 'கீச்சுகள்' இதழின் பின்னால் இருக்கும் உன்னத நோக்கம் இதோ..."


அசிஸ்ட் (ASSIST) நிறுவனத்தின் சிறுவர் மேம்பாட்டுத் துறை ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றும் எனது முதலாம் ஆண்டில், எமது துடிப்பான ஆசிரியர் குழுவுடன் இணைந்து 'கீச்சுகள்' இதழை உருவாக்கியது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. குழந்தைகளின் ஆக்கப்பூர்வமான படைப்பாற்றலை ஒரு வலிமையான இதழாக மாற்றியது ஒரு சிறந்த அனுபவமாகும்.

சிறுவர் மேம்பாட்டுத் திட்டங்களில் எனக்குள்ள நேரடி அனுபவத்தைக் கொண்டு, இந்தப் பக்கங்களை செதுக்கியது போலவே குழந்தைகளின் சிந்தைத்திறன் ஒளிர்வதையும் நான் கண்டுள்ளேன். காலநிலை நீதி குறித்த கவிதைகள் முதல், பாதுகாப்பான விளையாட்டு இடங்களைக் கோரும் கதைகள் வரை–சிறுவர் உரிமைகள் மற்றும் பூமி பாதுகாப்பு குறித்து எமது கிராமப்புறக் குழந்தைகள் தங்களது கருத்துகளைத் துணிச்சலுடன் வெளிப்படுத்தப் பயிற்சி அளிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

இந்த முதல் முயற்சியின் மூலம் அவர்களது குரல் பலரையும் சென்றடைவதைக் காணும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒரு நிலையான உலகத்திற்காகக் குரல் கொடுக்கும் வலிமையை அவர்களுக்கு நாம் வழங்கி வருகிறோம் என்பது உறுதியாகிறது. ஒவ்வொரு குழந்தையும் ஒரு மாற்றத்தை உருவாக்கும் நாயகர்களாக (CHANGE MAKER) ஜொலிப்பதற்கான ஒரு தளத்தை நாம் இணைந்து உருவாக்கியுள்ளோம்.

அன்புடன்,

**அருட்சகோதரி. ஜோசப் பிரிட்டென்சியா,**
சிறுவர் மேம்பாட்டுத் துறை ஒருங்கிணைப்பாளர், அசிஸ்ட் (ASSIST).





# சின்ன கைப்பிடி

சின்ன கைப்பிடியில் பெரிய உலகத்தை சிரித்து சுமக்கும் குழந்தைகள் நாம் காணும் அதிசயம்.
விழியில் ஒளிரும் அவர்களின் கருணை, வானம் போல எல்லோரையும் சேர்த்தழைக்கும் சிரிப்பு.
தாழ்மையென்று சொல்லாமல் செய்யும் செய்கைகள், காற்றைப் போல மென்மையுடன் மனதை வருடும்.
ஒரு பொம்மை பகிர்ந்தால் கூட மகிழ்ச்சி இரட்டிக்கும், அவர்களின் உண்மையான இதயம் அதற்கே சாட்சி.
நீல வானத்தில் பறந்திடும் பறவைகளைப் போல, அவர்களின் கனவுகள் உயரம் தொட்டாலும் பாதம் தரையில் - தாழ்மையோடு நிற்கும்.
நம் நாளை அழகாக்கும் மென்மையான குரல்கள், நம் உயிரை நெகிழ்த்தும் இன்பச் செயல்கள் - அனைத்தும் குழந்தைகளின் அன்பின் பரிசுகள்.
கருணையையும் தாழ்மையையும் கற்றுக் கொடுக்க நீதிநூல் வேண்டாம்; ஒரு குழந்தையின் புன்னகை போதும்.
குழந்தைகள் தினம் இன்று, அவர்களின் இதயத்தில் இருக்கும் அன்பின் விளக்கே நம் உலகை ஒளிர்க்கும்.

- மரியா ஜூலியானா (வெலிங்டன்)



# இயற்கை - பூமி
# எதிர்கால நம்பிக்கை



நாளை பிறக்கும் பூமிக்காக! இயற்கைகாக!
மழைத்துளியில் மறைந்திருக்கும்
பூமியின் நெஞ்சுத் துடிப்பு
அதை கேட்கக் கற்றுக்கொண்டால்
நாமே அவள் பிள்ளைகள் என்போம்
காற்றின் வாலில் நின்று
கிளைகள் பேசும் சத்தம் கேட்டால்..

உலகம் பழையதும் இல்லை
முன்னேறிக் கொண்டிருக்கிற புதுப் பிறப்பே
நதியின் அலையில் நீந்தி வரும்
நம்பிக்கையின் மென்மைத் துளி
அதை கைப்பிடியில் தாங்கினால்..

நாளை நம்மை நம்பிக் காத்திருக்கும்
பருவம் மாறினாலும் பசுமை மாறாததற்கு
நாம் நடும் ஒரு மரமே போதும் - அது
வார்ப்பது ஓர் எதிர்காலம்

பூமி சுவாசிக்கும் இசையில்
எமது இதயமும் ஒத்திசைவு கொள்ளும்போது
இன்று விதைக்கும் நன்மை எல்லாம் நாளை
நமக்காக மலர்ந்து நிற்கும்

அட்சயா (புளியடித்தமம்)



# குழந்தைகளின் உரிமைகள்

ஒரு காலத்தில், சின்னத்துறை என்ற கிராமத்தில் மீனா என்ற சிறுமி வாழ்ந்தாள். அவள் தினமும் காலை எழுந்தவுடன் பள்ளிக்குச் செல்வதை மிகவும் விரும்புவாள். ஆனால் ஒரு நாள், அவள் நண்பன் ராஜீ பள்ளிக்கு வரவில்லை.

மீனா கவலைப்பட்டு ராஜீவின் வீட்டுக்கு சென்றாள். ஆனால் ராஜீ வேலைக்குச் சென்று கற்களைத் தூக்கிக் கொண்டிருந்தான். "ராஜீ, நீ பள்ளிக்கு ஏன் வரவில்லை?" என்று மீனா கேட்டாள். ராஜீ சோகமாக, "எங்கள் வீட்டில் பணம் இல்லாததால் நான் வேலை செய்யணும், பள்ளிக்கு போக முடியல" என்று சொன்னான்.

அதை கேட்ட மீனா உடனே ஆசிரியரிடம் சென்று கூறினாள். ஆசிரியர், கிராம முதல்வர், ராஜீவின் பெற்றோர்கள் அனைவரும் சேர்ந்து பேசினர்.

முதல்வர் சிரித்தபடி சொன்னார்: "ராஜீ, நீ ஒரு குழந்தை. உனக்கு கல்வி பெறும் உரிமை இருக்கிறது. வேலை செய்ய யாரும் உன்னை கட்டாயப்படுத்தக்கூடாது. அதோடு, நீ பாதுகாப்பாக வாழவும், விளையாடவும், உணவும், அன்பும் பெறுவது உன் முக்கிய உரிமைகள்".

ராஜீவின் பெற்றோர்கள் இதை கேட்டு, அவனுடைய கல்விக்குத் துணை நிற்பதாக உறுதியளித்தார்கள். அடுத்த நாள் ராஜீ மகிழ்ச்சியுடன் மீனாவுடன் பள்ளிக்கு வந்தான். இருவரும் சேர்ந்து படித்து, விளையாடி சந்தோஷமாக இருந்தனர்.

அந்த நாள் முதல் சின்னத்துறை கிராமத்தின் உள்ள எல்லா பெரியவர்களும் ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொண்டார்கள். மீனா சிரித்தாள்: "இது எங்கள் உரிமைகள், நம்மை யாரும் தடுக்க முடியாது!".

செ. ஜெகன் (புளியடித்தமம்)



# என் பூமி
# என் எதிர்காலம்






"பூமி உன்னுடையது என்றால், அதைக் காப்பது யாருடைய கடமை?" என்று 12 வயது ஆதவன் தன் அம்மாவிடம் கேட்டான்.

அம்மா சிரித்துக் கொண்டே, "நம்ம எல்லாருடைய கடமைத்தான். ஏன் இப்படி கேட்ட?" என்றார்.

ஆதவன் ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். தெருவில் புகை மூட்டம், குப்பை மேடுகள்... பறவைகளுக்கே இடமில்லாத சூழல். "இப்படி இருந்தால், நான் பெரியவனாகும் போது எந்த பூமியில் வாழப் போறேன்?" என்று அவன் கேட்டான்.

அன்று முதல், ஆதவன் ஒரு முடிவை எடுத்தான். தினமும் பள்ளிக்கு செல்லும் வழியில் இருக்கும் மரத்துக்கு தண்ணீர் ஊற்றத் தொடங்கினான். வீட்டில் பிளாஸ்டிக் குப்பைகளைத் தனியே சேகரித்து, மறுசுழற்சிக்கு கொடுத்தான். நண்பர்களைச் சேர்ந்து 'சின்ன மாற்றம் பெரிய எதிர்காலம்' என்ற பெயரில் ஒரு சிறிய குழுவையும் தொடங்கினான்.

ஆதவன் நடத்திய மாற்றம் சிறியதுதான். ஆனால் மெதுவாக அந்த தெருவில் குப்பை குறைந்தது, இரண்டு புதிய மரங்கள் நடப்பட்டது, பறவைகள் திரும்பி வந்தன.

ஒரு நாள் அந்த முதல் மரத்தின் புதிய கிளையில் ஒரு மயில் இறகு விழுந்தது. அதை எடுத்து பார்த்த ஆதவன் மகிழ்ச்சியுடன் சொன்னான், "இதுதான் என் பூமி... இதுதான் என் எதிர்காலம்."

அம்மா பெருமையோடு பார்த்துக் கொண்டு, "நீ மாற்றத்தை தொடங்கிய நாளிலிருந்தே பூமிக்கு புதிய எதிர்காலம் பிறந்துடுச்சு மகனே" என்று சொன்னார்.

நிஷா (புளியடித்தமம்)

# நம் பூமியின் எதிர்காலம்



பசுமை சூழ்ந்த பூமியிது!
பல்லுயிர் வாழும் ஞாலமிது!
வளங்கள் சிதைந்த காலமிது!
விழித்துக் கொள்ளும் நேரமிது!
ஓசோன் ஓட்டை வழியாக
வெப்பம் இறங்குது அனலாக...
மழைநீர் இறங்கும் வழியாக
நெகிழி அடைக்குது கழிவாக
தொழிற்சாலை கழிவு விடமாக
கடலும் ஆகுது மாசாக...
வாகனப்புகை வானேக
காற்றும் மாறுது நச்சாக...
மரங்கள் வெட்டிய பலனாக
நீர்வளம் குறையுது ஏரியாக...
மண்ணை அள்ளும் விளைவாக
ஆறுகள் காணா நிலையாக...
செயற்கை உரங்கள் பயனாக
மண்ணும் ஆனது மலடாக...

க. ரேவதி (கீழ ஈரால்)



# சுற்றுச்சூழல்



அலையின் சிரிப்பு நெகிழி விதைக்கிறது.
காட்டுத் தீ எங்கும், காடுகள் கருகும் வாசனை.
ஓசோனின் கூரை உடைந்து வருகிறது.
வெப்பக் காற்று வீசுகிறது...
நம் ஆசை, பேராசையாகி,
பூமியின் அழகை அழிக்கிறது.
பறவைகள் பாடும் மொழி எங்கே?
நதிகள் ஓடும் ஓசை ஏன் நின்றுவிட்டது?
நமது தலைமுறை செய்த தவறால்
வரும் தலைமுறைக்கு என்ன சொல்வோம்?
மரம் நடுவோம், காடுகளைக் காப்போம்.
நீரை சேமித்து பூமியைப் புதுப்பிப்போம்...
நெகிழி பயன்பாட்டைத் தவிர்த்து
இயற்கையோடு இணைந்து வாழ்வோம்.
இருக்கொரு விதை தூவுவோம்,
காடுகளை மீட்டெடுப்போம்.
இது நம் கடைசி வாய்ப்பு,
பூமியின் கடைசி சுவாசம்...
அன்பின் கரங்களால் அகிலமதை காப்போம்...
அப்போதுதான், மீண்டும் பூக்கும் நம் பூமி.

ச. ஐயப்பன் (கீழ ஈரால்)



# நாம் முயன்றால்

ஒரு நாள் நான் டீ தோட்டத்தில் நடந்து இயற்கையை ரசித்துக் கொண்டு இருந்தேன். அப்போது என் முன் திடீரென ஒரு காட்டெருமை தோன்றியது. நான் பயந்து ஓடினேன். ஆனால் பின்னால் அது என்னை அழைக்கிறது போல் உணர்ந்தேன். திரும்பி "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டபோது, அது மெதுவாக பேசத் தொடங்கியது.

"பாப்பா, நான் என் குட்டிகளுடன் பசியாற இந்தத் தோட்டத்துக்கு நான் வருகிறேன். யாருக்கும் தீங்கு செய்ய விரும்பவில்லை. ஆனால் உங்கள் பெரியவர்கள் கல்லெறிந்த எங்களைத் துன்புறுத்துகிறார்கள். அதனால்தான் சில நேரங்களில் நாங்களும் கோபப்படுகிறோம். உன்னை நான் எதுவும் செய்ய மாட்டேன். நீ நல்ல குழந்தை. ஒரே ஒரு உதவி - உன் குடும்பத்தாரிடம் சொல்லு, எங்களைக் காயப்படுத்த வேண்டாம் என்று."

அது மேலும் சொன்னது: "நாங்களும் இக்காட்டில் அமைதியாக வாழவே விரும்புகிறோம். நீங்கள் எங்களை விட்டுவிட்டால், நீங்கள் எல்லா இடங்களுக்கும் பயமின்றிப் போகலாம்."

இது கற்பனை மட்டும் அல்ல - ஒவ்வொரு உயிரும் வாழ ஆசைப்படுகிறது. நாம் அவற்றை காயப்படுத்துகிறோம். நாம் (அவை) அவையும் நம்மைத் தொந்தரவு செய்யாது. குழந்தைகளான நாம் முயன்றால், அனைத்தும் நல்லபடியாக மாறும்.

V. விவின் ஆண்ட்ரே (வெலிங்டன்)





# விழுந்தாலும் எழும் விதையாய் இரு

விழுந்தாலும் எழும் விதையாய் இரு,
மறைந்தாலும் உதிக்கும் சூரியனாய் இரு,
தேய்ந்தாலும் வளரும் சந்திரனாய் இரு,
நிற்காமல் ஓடும் கடிகாரமாய் இரு,
அவமானம், உதாசீனம் இவற்றை
பாடமாய் எடு,

நேரம், முயற்சி, பயிற்சி
மூன்றையும் கையில் எடுத்தால்,
இங்கு யார் வேண்டுமானாலும்
எதை வேண்டுமானாலும்
சாதிக்க முடியும்.

உழைப்பின் ஊதியத்தை நீ
அடையும் காலம் வெகு தூரத்தில் இல்லை

கலங்காமல் காத்திரு
வெற்றி உன் வசம்

-கவின் ஆன்டர்சன் (திண்டுக்கல்)





# அடர்ந்த காடுகள்

அடர்ந்த காடுகள் சூழ்ந்த ஒரு அழகிய கிராமம் இருந்தது. கிராமத்தின் ஒருபுறத்தில் மலைகள் கம்பீரமாய் உயர்ந்து நின்றன. அந்த கிராமத்தை ஒட்டி மஞ்சள் நதி என்ற ஆறு ஓடிக் கொண்டு இருந்தது. இயற்கை எழிலுடன் அந்த கிராமம் கொஞ்சம் அழகுடன் இருந்தது. அந்த கிராமத்து மக்கள் இயற்கையை மிகவும் நேசித்து அதன் வளங்களை வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு இருக்கையில் அந்த கிராமத்தில் மாணிக்கம் என்ற ஒரு செல்வந்தர் குடியோறினார். அந்த கிராமத்தை சூழ்ந்துள்ள இயற்கை வளங்களின் மூலம் பணம் ஈட்ட வேண்டும் என்பதே அவரின் திட்டம். மணலைத் தோண்ட சிலரை வேலைக்கு பணி அமர்த்தினார். இரவில் கிராம மக்கள் உறங்கியுவுடன் தனது வேலையாட்களுடன் ஆற்றுப் படுகைக்குச் சென்று மணலைத் தோண்டி, அவற்றை லாரிகளில் ஏற்றி பக்கத்து நகரத்திற்கு விற்பனைக்கு அனுப்பி வைத்தார். இவ்வாறாக மணலைத் திருடி தினமும் விற்க ஆரம்பித்தார். சில நாட்கள் கடந்தன. கிராம மக்கள் மாணிக்கத்தின் மணல் கொள்ளை பற்றி தெரிந்து கொண்டனர். ஊரில் உள்ள பெரியவர்கள் ஒன்று கூடி மாணிக்கத்திடம் சென்று ஆற்று மணலை அள்ளக் கூடாது என்று கூறினார்கள். அனால் அவனோ எவரையும் மதிக்காமல் விரட்டி அடித்தான். அவனது வேலையாட்களைக் கொண்டு அவர்களை துரத்தினான். அவர்கள் மனம் நொந்து திரும்பினர். மாணிக்கம் இயற்கை ஆர்வலராக மாறினான். அவனது கதை பல தலைமுறைகளுக்கு ஒரு உத்வேகமாக அமைந்தது.

லியோ (திண்டுக்கல்)





# கடைசி விதை

உடைந்த கட்டிடங்களும் காய்ந்த ஆறுகளும் நிறைந்த பாழடைந்த உலகில், 11 வயது ஆதித்யா வசித்து வந்தான். "மழை என்றால் என்ன? மரம் என்றால் எப்படி இருக்கும்?" என்று அவன் கேட்க, பாட்டி அவனுக்கு அந்தப் பழைய பசுமை உலகைக் கதையாகச் சொன்னார்.

அன்று மாலை, குப்பைகளுக்கு நடுவே ஒரு சிறிய உலோகப் பெட்டியை ஆதித்யா கண்டான். அதில் உலர்ந்த மண்ணுக்குள் ஒரு கருமையான பொருள் இருந்தது. அதுதான் "உலகின் கடைசி விதை".

விஷக் காற்றிலிருந்து அதைக் காக்க, ஆதித்யா ஒரு மண்ணின் கூடையில் அதை நட்டு, தான் சேமித்து வைத்திருந்த கடைசித் துளி நீரையும் ஊற்றி, கண்ணாடிச் சில்லால் மூடினான். நாட்கள் ஓடின... ஒரு காலைப் பொழுதில், அந்தத் துளிர்த்த பச்சை நிறம் அவன் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. "இதுவே என் பூமி, என் எதிர்காலம்!" என்று அவன் உறுதியுடன் கூறினான்.

- ஷர்சி பிரசன்சியா (திண்டுக்கல்)





# எதிர்கால நம்பிக்கை

முன்னொரு காலத்தில் வானம் பார்த்து வேளாண்மை செய்யும் வழக்கம் உண்டு. அதே போல் ஒரு கிராமம் மழையை நம்பி உயிர் வாழ்ந்து வந்தது. அந்த சமயத்தில் சரியான நேரத்தில் மழை பொழியவில்லை. காரணம் என்னவென்றால் தேவலோகத்தில் இருக்கும் தேவன் ஒருவர் ஒரு சங்கை சத்தமிட வைத்தால் மட்டுமே மழை பொழியும் என்பர். அந்த தேவனும் சங்கை ஊதவில்லை. ஆகையால் ஊர் மக்கள் எவரும் வேளாண்மை செய்யவில்லை.

ஆனால் ஒரு முதியவர் மட்டும் மழை பொழியும் என்ற நம்பிக்கையில் பயிரிட்டார். அந்த கிராம மக்கள் அவரைப் பார்த்து ஏளனம் செய்தனர். அவரும் எதையும்...

காதில் வாங்கி கொள்ளாமல் வேலை செய்தார். அப்பொழுதுதான் அந்த தேவனுக்கு சந்தேகம்! இந்த சங்கை ஊதி பல நாளாயிற்றே இனி இந்த சங்கில் இருந்து சத்தம் வருமா என நினைக்க சங்கை ஊதினார். பின்பு என்ன நடந்திருக்கும் என்று கண்டு பிடியுங்கள்.

— L. தர்ஷினி (மணிகண்டம்)





# பூமி

பூமி அழகான வீடு
அதில் நாமமெல்லாம் குடும்பம்
மரம் பச்சை நண்பன்
அதன்  நிழல் நல்ல துணை
காற்று மெதுவாக வரும்
என் மனசு குளிரும்
மழை பொழியும் போது
நிலம் சிரித்து மகிழும்
சூரியன் ஒளி தரும் நாளுக்கு
புதிய பலம்
நதி ஓடும் சத்தம்
எனக்கு இனிய இசை
பூமியை நாம் காக்க
நமக்கே நல்ல நாள் வரும்
ஒரு செடி நடுவோம்
ஒரு நம்பிக்கை வளரும்

ரா. பிரிசில்லா (தெற்கு பாகனுர்)



# CHILDREN

## Seeds of Dawn

### Where Dreams Take Root & Futures Bloom

**The Facts You Need to Know About Our Work**

## WHAT WE DO

We run Evening 64 Study Centers, organise Neighbourhood Children's Parliaments, and create hands-on learning experiences like robotics training throughout 8 districts in tamilnadu

## WHAT WE ACHIEVED

- **1,250 children** in our programmes
- **1200 students** Trained in STEM
- **450 students trained** in civic leadership

## Ways to collaborate

- Build safe learning spaces for children to study after school
- Donate learning materials - books, robotics kits, STEM tools
- Connect us with mentors - engineers, teachers, professionals who can inspire
- Volunteer your time - teach a skill, conduct workshops

## Package Options

| Amount | Package |
|---|---|
| ₹50,000 | SUPPORT THE RUNNING COST OF A EVENING STUDY CENTER FOR 6 MONTHS |
| ₹50,000 | PROVIDE ROBOTICS KITS & TRAINING FOR 5 CENTERS |
| ₹1,25,000 | LEARNING MATERIALS FOR CHILDREN (BOOKS, STATIONERY, EDUCATIONAL TOOLS) |

**80G Tax exemption available for contributions**

**DONATE ♥**

+91 89252 73548

www.assistfma.com





# கீச்சுகள்

பகிரப்பட்ட கனவுகளே மாற்றத்திற்கான அடிப்படை. எமது லட்சியங்களைச் செயல்பாடுகளாக மாற்ற உறுதுணையாக நின்ற நன்கொடை நிறுவனத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகள்.
விழிப்புணர்வு பெற்ற ஒவ்வொரு குழந்தையும், பாதுகாக்கப்பட்ட ஒவ்வொரு மரமும் நாம் இணைந்து அடைந்த வெற்றியின் சாட்சிகள்.
குழந்தைகளின் உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக நீங்கள் செய்துள்ள முதலீடு, ஒரு சிறந்த எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் எமக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கிறது.

நீதியான மற்றும் நிலையானதொரு உலகைப் படைக்க
நாம் தொடர்ந்து இணைந்திருப்போம்.


**வெளியீட்டாளர்**

அசிஸ்ட் (ASSIST)

சமூக மேம்பாட்டு அலுவலகம்
மதுரை மெயின் ரோடு, மணிகண்டம்,
திருச்சிராப்பள்ளி - 620 012.

+91 72008 05267

intfmado@gmail.com